மாநகர ஆணை எண்.114 /2023
ந.க.எண்.அ6/12754/2019
நாள். 17-02-2023

மாநகர காவல் அலுவலகம்,
சேலம் மாநகரம்.

**இளநிலை உதவியாளர் தரத்தில் பணிவரன்முறை செய்தல் –ஆணை**

தலைமை அலுவலக பணி நியமன அணை ந.க.எண்.84761/NGB 2(2)/2018, நாள்.02.08.2018 மற்றும் இம்மாநகர ஆணைஎண்.578/2018, ந.க.எண்.அ6/21019/2018 ன் படி திரு S.சுரேஷ்குமார் என்பவர் கணினி விவர பதிவாளர் பதிவியிலிருந்து இளநிலை உதவியாளராக சேலம் மாநகரத்தில் பணி நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இவர் 07.08.2018 முற்பகல் அன்று சேலம் மாநகர காவல் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

2) மேலும் அரசு கடிதம் எண் 7819/காவல் 15/2022-2 நாள் 21.11.2022 மற்றும் தலைமை அலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை ந.க.எண் 2528450/சி.ஏ.ஆா -1/2022 நாள். 03.12.2022 ல் கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு பின்னர் பணிமாற்றலின் கீழ் தட்டச்சர் / இளநிலை உதவியாளர்களுக்கான பணி நியமனம் செய்யப்பட்டுள்ள தனியர்களின் பணியினை மீண்டும் வரன்முறைப்படுத்துவது குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **“I)** தமிழ்நாடு அரசுப்பணியாளாகள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28(1)ன் அடிப்படையில் **(Sec 28(1) of Tamil Nadu Government Servants (Condition of Service) Act 2016** கருணை அடிப்படையில் காவல் துறையில் கணினி விபரப்பணியாளாகளாக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவாகளது பணி அப்பதவியில் உரிய தற்காலிக விதிகளின்படி **(Adhoc Rules under Tamil Nadu General Subordinate Service issued in G.O.(Ms) No. 220, Home (Pol XV) Department, dated: 18.02.2016)** பணிவரன்முறை செய்யப்பட்டு அப்பதவியிலேயே தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்டு வருகிறது.
>
> **“I I )** இந்நிலையில் மீண்டும் அவாகள் காலிப்பணியிடம் பணி விதிகள் அடிப்படையில் பணி மாறுதலின் கீழ் **(under Recruitment by transfer)** தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகுக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளா / தட்டச்சா பதவியில் **(Junior Asst. Typist under Tamil Nadu Ministerial Service)**நியமனம் செய்யப்படும் நிலையில அவாகளது பணி இளநிலை உதவியாளா/ தட்டச்சா பதவியில் உரிய பணி நியமனம் அலுவலரால் மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவின்படி வரன்முறை செய்யப்பட்டு உரிய ஆணைகள் வெளிப்படப்படவேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> **“III)** ஏற்கனவே, கருணை அடிப்படையிலான பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ள நிலையில் இத்தகைய இளநிலை உதவியாளா / தட்டச்சா பதவியில் செய்யப்படும் தமிழ்நாடு அமைச்சுப்பணிகளின் கீழான பணி வரன்முறை கருணைஅடிப்படையிலான நியமனத்தின் பணி வரன்முறையாகக் கருத வேண்டிய அவசியம் எழவில்லை.

3) எனவே, காவல் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட கணினி விவர பதிவாளாகளின் முதுநிலை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் பணிமாறுதல் மூலமாக தட்டச்சா /இளநிலை உதவியாளராக பணியமாத்தப்பட்ட தனியாகளுக்கு விதித்தளாவு தேவைப்படாத நோவுகளில் பணிவரன்முறையினை உரிய நியமன அலுவலா நிலையிலேயே மேற்கொள்ளலாம் என அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CS Scanned with CamScanner

4 ) மேலும், மேற்கண்ட அறிவுறுத்தல்படி 05.09.2018 க்கு முன்னா் அதாவது சென்னை உயா் நீதிமன்ற நீதிப்பேராணை எண் 45835/2006 நாள் 05.09.2018 நாளிட்ட தீா்ப்புக்கு முன்னா் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் பணிமாறுதல் மூலம் தட்டச்சா் / இளநிலை உதவியாளா்களாக பணியமா்த்தப்பட்ட தனியா்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ) திரு. S.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் தந்தை இறந்த தேதி 09.02.1999. இவர் தந்தை இறந்த தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அதாவது 24.05.1999 அன்று கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி மனு சமர்ப்பித்துள்ளதாலும், மனு சமர்ப்பிக்கப்படும் பொழுது இவர் 26 வயது நிறைவு செய்திருப்பதாலும், மேலும் அடிப்படை கல்வித்தகுதி எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்ற காரணத்தினாலும், எவ்வித அரசின் விதித்தளர்வு தேவைப்படாத நேர்வில், இளநிலை உதவியாளர் தரத்தில் இவரது பணியினை 07.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/- நஜ்முல் ஹோதா,
காவல் ஆணையாளர்,
சேலம் மாநகரம்.

பெறுநா்
திரு. S.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர், மாநகர காவல் அலுவலகம், சேலம் மாநகரம்.
நகல்: காவல் துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4.
நகல்.பி5 உதவியாளர், மாநகர காவல் அலுவலகம், சேலம் மாநகரம்.
நகல்: மாநகர ஆணை புத்தகம்.
நகல்: இருப்பு கோப்பு.

//உ.ந.உ.ப.அ//

M. MALATHI

முதுநிலை நிர்வாக அதிகாரி

CS Scanned with CamScanner